# திறவுகோல்

2054

பங்குனி

மாத இதழ்



வெளியீடு:

மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...

பகிரி: +91 8220567322

இணையம்:

https://maintharkal.mannai.in/

# பிரச்சனைக்குள் வாய்ப்பு!



எல்லோரும் வாய்ப்பைத் தேடி அலைகிறோம் அதுவும் பிரச்சனை இல்லாத வாய்ப்பைத் தேடி அலைகிறோம். ஆனால் உண்மையில் பிரச்சனைக்குள்தான் வாய்ப்பு உள்ளது என்பதை பலரும் அறிவதில்லை.

எல்லா பிரசனைக்குள்ளும் ஒரு வாய்ப்பு ஒளிந்து இருக்கிறது என்று நம்புகிறவர்கள் "நேர் மறை சிந்தனையாளர்கள்". அந்த குறிப்பிட்ட பிரச்சனைக்கு தீர்வு காணும்போது அந்த வாய்ப்பு பளிச்சென்று தெரியும்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு ஊடக அலுவலகத்தில் ஒருவருக்கு நிருபர் வேலை கிடைக்கிறது. அன்று சுதந்திர தினம் எனவே ஒவ்வொரு நிருபரும் ஒவ்வொரு இடத்திற்கு செய்தி சேகரிக்க அனுப்பப்பட, புதிதாக சேர்ந்த நிருபருக்கு கப்பற்படை கப்பலில் நடக்கும் சுதந்திர தின விழா கொண்டாட்டம் பற்றி செய்தி சேகரிக்க அனுப்புகிறார் ஆசிரியர்.

செய்தி சேகரிக்க சென்று ஏமாற்றத்துடன் திரும்பிய புது நிருபரிடம், "என்ன ஆச்சு உன் முதல் பணி" என்று சக நிருபர் கேட்க, அதற்கு அவரோ "நான் செய்தி சேகரிக்க சென்ற கப்பற்படை கப்பலில் ஓட்டை விழுந்து கடலில் கப்பல் மூழ்கியதால், சுதந்திர தின விழா கொண்டாட்டம் இரத்து செய்யப்பட்டுவிட்டது, அதனால் செய்தி சேகரிக்க முடியவில்லை, முதல் பணியே எனக்கு பிரச்சனை" என்று புலம்ப அதிர்ந்த சக நிருபர்" அடப்பாவி சுதந்திர தின விழா கொண்டாட்டம் நடைபெற இருந்த கப்பல் கடலில் மூழ்கியது" என்று செய்தி போட்டால் அது முதல் பக்க செய்தியாகும் உனது பணி பாராட்டப்படும், அதை விட்டுவிட்டு வந்துவிட்டாயே, இதோ நான் போய் செய்தி சேகரித்து வருகிறேன் என்று கூறியவாறே ஓடுகிறார்.

ஒரே நிகழ்வை ஒருவர் பிரச்சனை என்று பார்க்க, அடுத்தவரோ அதற்குள் இருக்கும் வாய்ப்பை பார்க்கிறார். அவரே தன் பணியில் வெற்றியும் பெறுவார். எனவே பிரச்சினைகளை எதிர்கொள்வோம், அதற்கு தீர்வு காண முயல்வோம், வாய்ப்பு தானாக வரும்.

—

முனைவர். சா.சம்பத்,

தேசிய பயிற்சியாளர் மற்றும் உளவியல் ஆலோசகர்.
மன்னார்குடி.

# பிணம் தின் யாக்கைப் பேய் மகள் துவன்றவும் - பட்டினப்பாலை காட்டும் வெற்றி கொண்ட பகைவரின் நிலமும் நிலையும்



திறவுகோல் வாசகர்களுக்கு அன்பின் வணக்கங்கள். சென்ற இரு இதழில் பங்களிக்க முடியாமைக்கு வருத்தங்களும் மன்னிப்பும். பிறந்திருக்கும் 2023ஆம் ஆண்டு அனைத்து உயிர்களுக்கும் ஆரோக்கியத்தையும் அமைதியையும் தர இயற்கையை வேண்டி வணங்குவோம்.

மார்கழி மாத இதழில் பட்டினப்பாலையின் தலைவன் கரிகாலனின் சிறுவயது சிறை வாழ்வையும் சீற்றத்துடன் வெகுண்டெழுந்து அரசு அரியணை பற்றி வீறு கொண்டு பகைவனை வென்றொழித்த வரலாறும் பார்த்தோம்.

கரிகாலன் வென்றொழித்த பகைவர்களின் நிலப்பரப்புகளில் நிலையயை பின்வரும் அடிகள் எடுத்தியம்புகிறது.

*வெண்பூக் கரும்பொடு செந்நெல் நீடி,*
*மா இதழ்க் குவளையொடு நெய்தலும் மயங்கி,*
*கராஅம் கலித்த கண் அகன் பொய்கை*
*கொழுங்கால் புதவமொடு செருந்தி நீடிச்,*
*செறுவும் வாவியும் மயங்கி நீர் அற்று,*
*அறு கோட்டு இரலையொடு மான் பிணை உகளவும்,*

கரிகால் வளவன் பகைவரை வெற்றி வாகை சூடியதோடு மட்டுமல்லாது பகைவரது மருத நிலத்து மக்களை அந்நிலத்தை விட்டு விரட்டியதால் மக்களற்ற நிலத்தை படம்பிடித்து காட்டுகிறது பட்டினப்பாலை. முன்னர் வெள்ளை மலர்களையுடைய கரும்பும் சிவப்பு நெல்லும் வளர்ந்து நின்ற வயல்களும் குவளை மலர்களுடன் நெய்தல் மலர்களும் கலந்து, முதலைகள் நிறைந்த பெரிய பொய்கைகளும் தற்போது நீரின்றி, அருகம்புல்லும் கோரைப்புற்களும் மண்டியதாக இது குளம், இது பொய்கை என்று அறியாது ஒன்றுபட்டு பாழ்பட்டுக் கிடந்தது. மக்களற்ற அவ்விடத்தில் காடு என எண்ணி ஆண் மான்களுடன் பெண் மான்கள் துள்ளி விளையாடுகின்றன.

இதை படித்து கரும்பைப் பற்றிச் சங்க இலக்கியங்கள் என்ன சொல்லுகின்றன என்று தேடிய போது சுவாரசியமான தகவல்கள் கிடைக்கின்றன.

கரும்பு பன்னெடுங் காலத்திற்கும் முன்பாகவே இருந்திருக்கிறது என்பதை சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நானிலத்துள் உழவர்கள் சமுதாயம் அதிகம் இருக்கப் பெற்றது மருத நிலத்தில்தான். இங்கு நெல், வாழை, கரும்பு முதலிய பயிர்கள் முதன்மையானதாக விளைவிக்கப்பட்டன. இதனை, "கரும்பமல் படப்பைப் பெரும்பெயர்க் கள்ளூர்' என்ற அகநானூற்று பாடலடி சுட்டுகிறது.

கரும்பு ஓராண்டு காலப் பயிராகும். செங்கரும்பு, கருப்புக் கரும்பு, ஆலைக்கரும்பு என இதன் வகைப்பாடுகள் பல இருப்பினும், நாம் பொங்கலுக்குச் செங்கரும்பினையும், கருப்புக் கரும்பினையும் அதிகம் பயன்படுத்தி வருகிறோம். இன்றைக்கு நாம் அன்றாடம் பயன்படுத்திவரும் பொருள்களில் தவிர்க்க முடியாத ஒன்று சர்க்கரை. "கியூபா" எனும் நாடு "உலகின் சர்க்கரைக் கிண்ணம்' எனவும் அழைக்கப்படுகிறது.

ஆனால், கரும்பினை முதன்முதலில் உலகுக்கு அறிமுகம் செய்தவர்கள் தகடூர் அதியமானின் முன்னோர்கள்தான் என்பதை ஔவையார்,

"அமரர்ப் பேணியும் ஆவுதி அருந்தியும்
அரும்பெறல் மரபின் கரும்பு இவண் தந்தும்
நீர்அக இருக்கை ஆழி' (புறம். 99:1-3)

என்றும்,

"அரும்பெறல் அமிழ்த மன்ன
கரும்புஇவண் தந்தோன் பெரும்பிறங் கடையே' (புறம். 392: 25-26)

என்றும் உணர்த்துகிறார். ஔவையின் இக்கூற்று, தமிழரின் பெருமையைப் பறைசாற்றுவதாய் உள்ளது.

மேலும், இயந்திரப் பொறிகள் மூலம் கரும்பிலிருந்து சாறு பிழிந்துள்ளனர். அவ்வாறு கரும்புச் சாற்றினை எடுக்கும்போது இயந்திரத்திலிருந்து வெளிப்படும் ஒலியானது யானை பிளிரும் ஒலியோடு ஒத்திருந்தது என்பதை ஓரம்போகியார், ஐங்குறுநூற்றில் "கரும்பின் எந்திரம் களிற்றெதிர் பிளிற்றும்' என்று காட்சிப்படுத்துகிறார். இன்றைக்கும் கரும்பிலிருக்கும் சாற்றினை எடுக்க இயந்திரப் பொறிகளையே பயன்படுத்தி வருகின்றனர்.

இதிலிருந்து நமது தமிழ்ச்சமூகம் எத்தகைய வளர்ச்சி பெற்றிருந்தது என்பதை அறியலாம்.

இனி, பகைவர் நாட்டு ஊர் அம்பலங்களின் அதாவது ஊர் மன்றங்களின் முந்தைய மற்றும் தற்போதைய நிலைமை விளக்குகிறார் பட்டினப்பாலை ஆசிரியர் .பகைவர் நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட (கொண்டி) மகளிர், நீர் உண்ணும் துறையில் மூழ்கி குளித்து அந்தி நேரத்தில் கொளுத்திய நந்தா (அணையாத) விளக்கையுடைய மலர்களால் அலங்கரிக்கப்பட்ட மெழுகின இடத்தில் ஏறி பலர் தொழ, புதியவர்கள் வந்து தங்கும், கடவுள் இருக்கும் கம்பங்களையுடைய மன்றங்கள். அம்மன்றங்களில் தற்போது, உயரமான தூண்கள் சாயும்படி உரசியவாறு பெரிய களிற்று யானைகள் தத்தம் பெண் யானைகளுடன் கூடித் தங்குமிடங்களாக மாறின. இதனை,

*கொண்டி மகளிர் உண் துறை மூழ்கி*
*அந்தி மாட்டிய நந்தா விளக்கின்,*
*மலர் அணி மெழுக்கம் ஏறிப் பலர் தொழ,*
*வம்பலர் சேக்கும் கந்துடைப் பொதியில்,*
*பரு நிலை நெடுந்தூண் ஒல்கத் தீண்டிப்*
*பெரு நல் யானையொடு பிடி புணர்ந்து உறையவும் 251*

என்ற அடிகள் விளக்கி நிற்கின்றன.

*அரு விலை நறும் பூத் தூஉய்த் தெருவின்,*
*முதுவாய்க் கோடியர் முழவொடு புணர்ந்த,*
*திரி புரி நரம்பின் தீந்தொடை ஓர்க்கும்*
*பெருவிழாக் கழிந்த பேஎம் முதிர் மன்றத்துச், 255*
*சிறு பூ நெருஞ்சியோடு அறுகை பம்பி,*
*அழல்வாய் ஓரி அஞ்சுவரக் கதிர்ப்பவும்,*
*அழு குரல் கூகையோடு ஆண்டலை விளிப்பவும்,*
*கணங்கொள் கூளியொடு கதுப்பு இகுத்து அசைஇப்*
*பிணம் தின் யாக்கைப் பேய் மகள் துவன்றவும், (252- 260)*

ஊர் மன்றங்களின் பாழ்நிலையைக் கூறிய பின்னர் மன்றங்கள் முன்னர் பின்னர் இருப்பின் தன்மையை விளக்குகிறார் ஆசிரியர். நறுமணமான மலர்களைத் தூவிய தெருவில் கூத்தர்களின் முழவோடு இணைந்த யாழின் இசையைக் கேட்கும் பெரிய விழாக்கள். இப்போது, அச்சம் முதிர்ந்த மன்றமாகத் திகழ்கிறது. அம்மன்றத்தில் நெருஞ்சிச் செடிகளுடன் அருகம்புற்கள் பரவியுள்ளன. நரிகள் அச்சம் தோன்றும்படி ஊளையிடவும், கூகையுடன் ஆண்டலை என்ற ஆந்தையும் அலறி நிற்கின்றன. கூட்டமாக உள்ள ஆண்

பேய்களுடன் கூந்தலை தொங்கவிட்டு ஆடும் பிணத்தை உண்ணும் யாக்கையை உடைய பெண் பேய்கள் நெருங்கி நின்று ஆடுகின்றன.

வெற்றி வாகை சூடும்போது பெருமிதமாக இருக்கும் மேற்கண்ட விடயங்கள், தோல்வி அடையும் பொது மாறாக இருக்கும் அல்லவா? கண்முன்னே எமது இனத்தின் சாட்சி உள்ளதே!

வெற்றிகொள்ள வழி தெரிந்தவர்கள், தோல்வியை தாங்கும், ஆராயும், மீண்டு வரும் உத்தியையும் கைக்கொள்ள வேண்டும். வரலாறு வாழ்க்கையை கற்ப்பிக்கிறது தானே! கற்றுக்கொள்வோம்.

—

இளவரசி இளங்கோவன்,
மொன்றியல், கனடா.

---



**மா. நிரல்யா,**
**சிங்கப்பூர்.**

# கனவு பூனைக்கு நிழலில்லை

யாரிட்ட முடிச்சிலோ நானிருக்கிறேன்
நானிட்ட முடிச்சிலும்
யாரோ இருக்கிறார்
முடிச்சுகள் இடைவெளி அற்றவை

கேட்பதில் சொல்வது கலந்திருக்கிறது
கேட்டதில் சொன்னதும்
நிறைந்திருக்கிறது
கேளாயோ ஜன்னல் மனமே

நிகழ்வுகளின் கூம்புநிலை
உச்சி மெல்ல நழுவட்டும்
மதில்களில் தான் என்பது
தவ்விப்பயிலும் தவமெனவும்
இருக்கலாம்
மெய்யகலும் ஒளியொன்றில்காது திருகி
கத்தத் தோன்றுகையில் வரம் பெற்றதென
ஐந்தாம் முடிச்சொன்றும்

இப்படித்தான் இறுக்கப்படுகிறது
இதுவரை நான் மட்டும் கண்ட கனவு
பின் எப்போதாவது ஜன்னல் புகுந்து
எட்டிக் குதிக்கும் பூனையாகிறது

நிழலின்றி தவிக்கும் வெளிச்சத்தில்
மிச்சக்கனவு
மதில் மேல் பூனை என்று யாராவது
சொன்னால் சுபம்....!
***

## கூன் கிழவியின் சிலுவைகள்

பசிக்கழுத மரணம்
அவளுக்கு வாய்க்கலாம்
அல்லது பசித்தழுத ஜனனம்
எனக்கு வாய்க்கலாம்

கூன் விழுந்த பாழ் கிழவியின்
சுருங்கிய முலைகளைக்
கண்டதும் ஓடிச் சென்று
பால் குடிக்கத் தோன்றியது
அப்படித்தான்

சுரந்து சுரந்து அயர்ந்து தொங்கும்
அன்பின் சிலுவைகளை
மார்பின் முடிச்சுகளே அறியும்

பால் நிலம் வற்றுதலும்
பாலை நில முற்றுதலும்
பராமுகமுடைய காலத்தின்
நீள்வட்ட சுழற்சி

யார் கண்டது கிழவியின்
இக் கொடும் வாழ்வின் வரிகள்
ஈரமற்ற முலைகளால் ஆனது
என்றும் அவை
கால சுருக்கங்களில் மீள்வது
என்றும்...!
***

## நானுமற்ற லாவகம்

இடைவெளியற்ற இன்னபிற
காரணங்களோடு
கழுத்துக்கும் உடலுக்கும் இடையே
இருவேறு வண்ணங்களில்
தேகம் துளைக்கிறது
தானும் நானுமற்ற லாவகம்

ஒன்றை போலவே இரண்டும் இருக்கிறது
என்னை போலவே நானும் இருக்கிறேன்
நம்புவதற்கு சிரமம் தான்

நம்பாததும்

கூர்ந்து பார்க்கும் பிம்பத்தில்
ஒருசேர நான் இரு நான்கள்

நானொரு வடிவத்தை
கலைத்துக் கொண்டேயிருக்கிறேன்
நகர்தலின் வேகத்தை
நிறுத்துதலின் வேகமும்
கொண்டிருக்கிறது.

அடிக்கோடிட எதுவெனில்
கலைத்து போட்டு அடுக்க
மீண்டும்
கலைக்க வேண்டும் என்னை...!
***

## காண்பதின் பின்னசைவு

விழுகவே வந்து
அமர்கிறது
பறந்த பிறகின் கணம்...

இனிதலே தந்தெடுக்கிறது
சிறந்த வயதின்
நிரப்புதல்...

காண்பதின் பின்னசைவுக்கு
விழிகள் தாண்டி
சில பார்வைகள்...

மூழ்கித் ததும்புதலில்
முன்னொரு முத்தமென
நான்கும் உதடுகள்.....

சாலச்சிறத்தல் எதுவென
கேள் அல்லது சொல்
சாலச் சிறக்கும்...

கூடுதலின் முக்திக்குள்
சாடுதல் யாது செய்யும்
அரவணை அள்ளி எடு....
***

## பொன்வீதி சாபங்கள்

உடைத்து விட்டு
சொல்லலாம் முன்பொரு
காலத்து சிலை என

என்புருக்கியும் இயலா
மனிதம் சற்று காலம்
வெல்லும் மாதிரி

எது கனவென இருக்கும்
சருடையும் சப்தம்
சாலைவாசிக்கு சாத்தியமில்லை

வீணைக்கு தெரிவதேயில்லை
மீட்டிய விரல்களின்
மொட்டவிழ்ந்தது பற்றி

மயங்கி திரிகையில்
இன்னுமொரு வண்ணம்
மயிலுக்கு கொடுக்கிறேன்

பெண் சங்கு பித்தனுக்கு
வேதியியல் மாற்றமென
பொன்வீதி சாபங்கள்

கலைத்து விட்டு போயே விட்டது
கலைந்தும் விட்டு போயே போனது
காற்றின் நிறம் தான் என்ன....?
***

## ஐந்து அப்பமும் இரண்டு மீனுமாக

அப்படியாக யாவருக்கும்
ஆசி வழங்கப் பட்டது
குருடர்கள் பார்வை அடைந்தார்கள்
முடவர்கள் நடந்தார்கள்
காணாத கஷ்டங்கள் தீர்க்கப்பட்டன
சொற்பொழிவும் சொற்றொடரும்
சொரூப சிந்தனையென
நீண்ட வரிசைக்கு
ஐந்து அப்பமும் இரண்டு மீனுமாக
பரிமாறப்பட்டன
அன்பின் ஆயிரம் கைகள்
அடுக்கடுக்காய் அற்புதம்
செய்தணைத்தது
மறுகன்னம் காட்டும் திடமே மந்திரம்
மானுடத் தவறுகள் சிலுவையில்
சரி செய்யப்படும் என புன்னகைத்தார்
அன்றைய நிகழ்வு இனிதே
நிறைவடைந்தது
அதன் பிறகு பாதியில் விட்ட
மரக்கட்டிலை செதுக்க ஆரம்பித்தார்
இன்று முடித்து கொடுத்தால்தான்
அரிசி வாங்க முடியும்
மரியாள்
வெற்றடுப்போடு காத்திருக்கிறாள்....!

—

கவிஜி

---

## பெண்ணினம்

வலிகள் நிரம்பியும் வலிமையில்
வாழ்கிறாள்..
தாய்மைக் குணத்திலே தரணியை
ஆள்கிறாள்..

தன்னலம் ஏதுமின்றி தனித்துவம்
நிறைகிறாள்..
பிறர்நலம் காப்பதில் தன்னையே
அழிக்கிறாள்..

பிரசவ வலியிலே இறந்துமே
பிறக்கிறாள்..
பிள்ளையைக் கண்டதும் வலிகளை
மறக்கிறாள்..

மொழிகள் யாவுமே பெண்மையை
போற்றுமே..
வஞ்சகர் உள்ளமே பெண்ணினம்
தூற்றுமே..

—

வாழ்வியல் கவி,
சா. நாகூர் பிச்சை,
திண்டுக்கல்.



# என் சமையலறையில்

என் பள்ளியறைக்கு மட்டும் உரித்தான
சில உடைமைகள்
என் சமையலறை வந்த
கதை சொல்லவா...???

பொறித்து, புகைத்து
அவித்து, அறைத்து
கரைத்து, வறுத்து வெறுத்துப்போன
இடத்தை என் எண்ணங்களை
வண்ணங்களாக்கும் இடமாக்கிய
வழியைச் சொல்லவா...???

அடுப்படிக்கு ஏன் அலைபேசி
என்றார்கள்...???
அங்கே அடுக்காய் இருக்க வேண்டுமாம்
அனைத்தும்.
வைத்தது வைத்தப்படி இருக்க
வேண்டுமாம்.

மாற்றித்தான் வைத்தால் தான் என்ன
என்றே
எண்ணெய் பக்கத்தில் எழுத ஏட்டை
வைத்தேன்.
தாளிக்க ஏதுவாய் கைக்கு பக்கத்தில்
கடுகு வைத்தேன். அதோடு
தமிழ்க்கவிபாட என் கார்குழலில்
கருமைப்பேனா சொருகி வைத்தேன்.

உலை காயும் நேரத்திற்குள் உரை
எழுதப்பார்த்தேன்.

காய்கறி அரிவதற்க்குள் கவிதை
வந்துவிட வேண்டுமென்றும்
கறிக்குழம்பு செய்வதற்குள் கட்டுரை
வந்துவிட வேண்டுமென்றும்
பலகாரம் செய்வதற்க்குள்
பாதியாவது எழுதி விட
வேண்டுமென்றே
எனக்குள் நானே பந்தயம்
வைத்தேன்.

என்ன பெருசா எழுதி கிழிச்சிறப்போரே
என்றே கீரை கடைந்தேன்.
சோறு வடிக்கும் வேளையில்
சொற்றொடர் வடித்தேன்.
புலிக்குழம்பு செய்ததோடு
புதுக்கவிதையும் செய்தேன்

எல்லா வேளைகளும் முடியும்
வேளையில் என் கவிதை முழுமை
பெறும்.என்
கட்டுரைக்கும் முடிவுரை வரும்.

என் எழுத்துக்கு முடிவு கட்டியாயிற்று
இந்த சமையல் கட்டுவது எப்போது
முடிவு கட்டுவது..??? என்றே
சலித்துக்கொண்டே சாம்பார் வைத்தேன்.

கலைந்த முடியோடு இரசம் கரைக்கும்
வேளையில்
மனம் கரையாமல் இருக்க கைபேசியில்
ரஹ்மானின் ராகங்கள் ஓரமாய் ஒலிக்க
வேண்டும்... எனக்கு இரசம் உணவு
செறிக்க உதவும்
ரஹ்மானின் இராகம் என் உள்ளம்
செழிக்க உதவும்

ஓய்வெடுக்கும் பள்ளியறையில் மட்டும்
என் மூளை வேலை செய்யாது
ஓய்வறியா சமையலறையில் ஓர்
மூலையில் வேளை செய்தாலும் என்
மூளை மங்கிவிடாது ஏன்றே எல்லாமும்

மாற்றி வைத்தேன். மனம் மாற்றி
வந்தேன்.

கருகவிடாமல் பார்த்துக்
கொண்டேன் காய்கறியையும்
கனவையையும்....தீயவிடாமல் பார்த்துக்
கொண்டேன் குழம்பையும் என்
கொள்கையையும்.....
இன்னமும்
தீரவில்லை எண்ணெயையும் என்
எண்ணமும்.......
பொங்கிக் கொண்டுதான் இருக்கிறது
மனமும், மாட்டுபாலும்
அடிக்கடி
குழைந்துவிடுகிறது சோறும், சோகமும்

ஆனாலும்...
நானும் காயும் சேர்ந்து வெந்தபோதும்
கூட
கிடைத்தது என்னவோ நல்ல விருந்து.

என் உணவுக்கும் தமிழுக்கும்
சுவை  நாள்தோறும் கூடிக்கொண்டே
தான் இருக்கிறது.
"நல்லாயிருக்கு "என்ற ஒற்றை
விமர்சனத்தால் ....



G. சூர்யகலா சரவணன், B.E,
கண்டிதம்பேட்டை, மன்னார்குடி.

---

# துளிப்பாக்கள்

கருப்பு வெள்ளை
இன வேறுபாடு காட்டுவதில்லை
நிழலைத் தீட்டும் ஒளி

காதலர் தினம்
பூக்களை நீட்டுகின்றன
சாலையோர மரங்கள்

நிலவைப்
பிடித்து பிடித்து விடுகிறது
அசையும் மரக்கிளை

நிலவை வரைகிறேன்
சிந்திய சொட்டுகள்
நட்சத்திரங்களாகின

கிழிந்த புத்தகம்
ஆடை தரிக்கிறது
ஒற்றைச் சிலந்தி

எல்லா எண்களையும்
ஒரே மாதிரியே உச்சரிக்கிறது
சுற்றும் நொடி முள்

—



சா.கா.பாரதி ராஜா,
38-3, கைலாசநாதர் கோயில் தெரு,
பெரிய நத்தம்,
செங்கல்பட்டு - 603002.
9944315732

# சித்தாளு

தலை சுமக்கும்
கனங்களெல்லாம்
தலைக்கணமின்றி
எக்கனமும்
இலக்கணமாகிறது
சிகரம் பதிக்கும்
சித்தாளே....!

கல்லும் மண்ணுமாய்
உயர்ந்த கட்டிடங்கள்
உன்னை உயர்த்தியே
உயர நின்று
பிரதிபலிக்கிறது

தோண்டிய குழிகளில்
கொட்டும் கற்களோடு
உன் சுமையும் தானே
புதைக்கப்படுகிறது
ஒவ்வொரு முறையும்...!

நீ சுமக்கும் போது
தலை கிரீடமாய்
அமர்ந்த செங்கல்லும்
வானுயர்ந்து நின்று
அலங்கரிக்கிறதே
நவீன கட்டிடமாய்....!

கொட்டிய வெயிலொடு
ஒட்டிய வயிற்றொடு
தகிக்கும் சூட்டில் பாதங்கள்
அழும்போதெல்லாம்
கூட்டில் வாழும் குஞ்சுகள்
பசியாற்றுகிறதே...!

கிழிசல்பட்ட சேலையும்
அழுக்குபடிந்த முகமும்
அழகாய் சிரிக்கிறதே
அவமானம் தாங்கி
அடுத்த வேளை உணவு
கோட்டையை கட்டியவாறே...!

நிதானமாய் சுமக்கும் உன்
ஒவ்வொரு அடியும்
பழுதாகவில்லை
புதிதாய் முளைக்கிறதே
செடியோரமாய்
சிரிக்கும் வாசங்களோடு....!

நீ கொட்டிய வலியை
நினைக்கும் போதெல்லாம்..!
விண்ணை முட்டியே
எழுந்து நிற்கிறது
நிமிர்ந்த கட்டிடங்கள்....!

வட்டியை கட்டாமல்
வீட்டை கட்டி வைத்து
அழகு பார்க்கிறாய்...!
நல்ல உடுப்பின்றி
ஒழுகும் வீட்டிற்குள்
உறக்கமின்றி ....!

தொலைந்த வாழ்நாளில்
சித்தாளாய் பரிணமிக்கிறாய்
மனம் திறந்து பேசு
உன் குடிசையும் உயரும்
வானுயர்ந்து ஒரு நாள்...!

*மானுடம்*
சொல்வதற்கும் இருக்கிறது

*நிறைய வார்த்தைகள்*
*அள்ளியணைத்து மகிழ*
*வெல்வதற்கும் இருக்கிறது*
*இனிய வார்த்தைகள்*

*சன்னமாய் புதைகிறதே*
*மனக்கோட்டையின் கதவுகள்*
*மெல்லனவே ஒலிக்கிறதே*
*ஓசையெழுப்பும் மணியொலியும்...!*

*முன்னோக்கி நகரும்*
*கால்விரல்கள் பத்தும்*
*தடங்களை வரைந்து பாதைகளாய்*
*நகலெடுத்து தருகிறதே..!*

*கன்னத்தில் பதியும்*
*கைவிரல்கள் பத்தும்*
*நம் எண்ணத்தை உலுக்கி*
*வழிப்படுத்தும் நகல்கள் தானே..*

*தினமொரு நினைவுகளும்*
*நம்மை உசுப்பேற்றிய பின்பும்*
*உதறும் மனதிற்கிடையே*
*பதறித்தடுமாறி தவிக்கிறதே*
*சிற்சில மனங்கள்...*

*கோபக்கனல்களை வீசி*
*மனக்குமுறல் தாகங்களை*
*அருந்தியாடும் வேடன்*
*கானகத்தில் கொலை*
*புரிவதோ அறியா மானிடம்..*

*மாயச்செயல் புரியும்*
*மானுடங்கள் மாயை உலகில்*
*மாயமாகிச் செல்வதும்*
*மாயமாய் உள்ளதே...!*

*தினமொரு கதை சொல்லி*
*மனமதிலே அதை ஊற்றி*
*குறுநகையால் நமை மாற்றி*
*ஒற்றை கயிற்றில் ஆட்டுவிக்கும்*
*பொம்மலாட்ட பொம்மைகள்தானே*
*நாமெல்லாம்...!*

*வான்மேகம் முகம்பார்க்கும்*
*குளத்தில் கல்லெறிவதா...?*
*நிலவின் வெளிச்சங்களை*
*பரப்பிய இரவின் மடியில்*
*துயில்வதுபோல் நடிப்பதா?*
*எது நிஜங்கள்......!*

*நெருப்பை பற்றவைத்த*
*திமிரிய விழிகளுக்குள்*
*சுயத்தை ஊற்றி பெருவெளியில்*
*பொய்மையாய்*
*உழல்வதும் எவ்விதமோ?*

*ஜாலங்கள் பேசிப்பேசி*
*ஓலங்கள் கேட்கும் வீதியிலே*
*மன கோலங்கள் வரைந்து*
*காலங்களை சுமக்கும்*
*கணங்களாய் முட்களை மட்டுமே*
*நகர்த்தும் முயல் ஆமை*
*கூட்டமா?*

*வெட்டி விழுந்த பாறைகளை*
*சிற்பி தட்டியெழுப்பி*
*படைக்கிறான் சிலைகளை...*
*சிலைகளும் பேசும்*
*சிற்பியின் உளிகள்*
*தட்டும்போதெல்லாம்....*
*சிலைகளாய் நிற்பதா?*
*மழையாய் பொழிவதா?*

மயக்கங்களை களைந்து
மதியினிலே நுழைந்து
உயிராய் உருவெடுத்திடு
புவனமதில் புகழுரையை
எழுதிடு...!

—

ஞா. முனிராஜ்,
அருப்புக்கோட்டை.

---

# சாயல்கள்...

சிலரின் சாயல்கள் எப்படியோ
பிரதிபலித்து விடுகிறது யரோவாக..!

அந்த குரல்கள் இன்னும் ஒலித்துக்
கொண்டிருக்கிறது.!!

அந்த உருவங்கள் ஆழப்புதைந்து கிடந்த
கிடங்கிலிருந்து அடிக்கடி எட்டி
பார்க்கிறது.

எங்கோ தொலைந்த அந்த குரல்களிலும்
சரி, இன்று வரை எட்டிப் பார்க்கும் அந்த
உருவங்களும் சரி•••
யாரோ ஒருவரிடம் சாயல்கள் என
தென்படுகிறது.!!

சில அசரீரிகளை இனம் கண்டு
கொள்வதை இன்றுவரை நிறுத்தியது
இல்லை நானும்,
இப்போது என் பேனாவும் !!!

இறந்து போனவைகள் அழகானவை,
சிலரின் சாயல்களின் உயிர்ப்பை தன்
கல்லறைகளின் மேல் தூவி சென்றதால் !!!

—

திருமதி. சரண்யா ரவி,
கோவை.

# வளை

உன் வளையலை வாங்கி
வரைந்த வட்டம்
விட்டத்தில் நிலவானது ஒருசமயம்

அன்றிலிருந்து இன்றுவரை
அந்த வட்டத்தை விட்டு
வெளியேற மனமின்றி
தவிக்கிறது முழுநிலவு

உன் வளையலை வாங்கி
வரைந்த வட்டம்
தோட்டத்து மலர்களின்
அல்லி வட்டமாகவும்
புல்லி வட்டமாகவும்
விரிந்தது மன்றொரு சமயம்

கைநிறைய அணிந்திருக்கும்
கண்ணாடி வளையல்களுள்
ஒன்றைக் கூட உடைக்காமல் இருக்க
நீ செய்யும் பிரயத்தனம்
பலிக்கவே பலிக்காது
என் பைத்தியமே

உடைக்காமல் நீ உன்
கண்ணாடி வளவிகளை
வைத்துக் கொண்டால்
என் கலையுருக்காட்டி
உடைந்த வளையல் துண்டுகளுக்கு
எங்கே போகும்?


கொலுசின் சப்தத்தோடு
போட்டா போட்டி போடும்
கண்ணாடி வளையல்கள்
உடையாமல் இருப்பதும்
கொலுசின் முத்துக்கள்
உதிராமல் இருப்பதும்
இலையுதிர் காலத்தில்
இலைகள் உதிராமல்
இருப்பதற்குச் சமம்

உதிர்க்காமல்
இன்னொரு வசந்தத்தை உருவாக்கிட
முடியாது

வானம் மேகத்தை
சூல் கொண்டு
சுமக்கும் போது
சூரியன் தன்னொளியால்
வானவில் வளையை
அணிவித்து அழகு பார்ப்பது
இயல்பான வளைகாப்பு.

—

மு. ஆறுமுகவிக்னேஷ்,
சத்திரப்பட்டி,
விருதுநகர் மாவட்டம்.




# அகமேந்தி நூல் விமர்சனம்..

*நூலின் பெயர்: அகமேந்தி*
*நூலாசிரியர் : ச. ராஜ்குமார்*
*பக்கங்கள் : 104*
*நூலின் விலை: 150.*
*அலைபேசி எண் : 8867933021*

*ச. ராஜ்குமார் அவர்களின்*
*"அகமேந்தி"*
*குறுங்கவிதைகள் தொகுப்பு...*

*அகமேந்தி என்றால்...*
*அன்பினைத் தாங்கி நிற்கும்*
*பெண்ணாம்...*

*சின்னச் சின்ன தலைப்புகளில்...*
*கவித்துவத்தோடு...*
*வாழ்க்கையை வாசத்தோடு*
*சொல்கிறார்...*
*கவிஞர் அகமேந்தியாய்!*

## வானம்..

*பறத்தலுக்கு வானம்*
*கைவசத்தில் இருக்கு*
*திரும்பி வந்தால்*
*கூடு கட்டத்தான்*
*மரங்களில்லை பறவைகளுக்கு*

*முதல் கவிதையிது...*
*முடக்குகிறது வேதனையில்...*
*பறவைகளில்லா வானம்...*
*அப்பப்பா*
*பதைப்பத வைக்கும் கவிதை.*

## நிம்மதி

*யாரோ ஒருவரிடம்*
*நம்மைத் தேடுவதில்*
*ஆரம்பமாகிறது...*
*நிம்மதியின்மை*

*உள்ளுக்குள் தேடாதவர்,*
*உலகத்தைத் தொலைக்கிறார்.*
*எனச் சொல்லும் கவிதை.*

## குறுங்கவிதை

*விற்பனைக்கு வந்த*
*மீனின் கண்களில்*
*வற்றிய கடல் பார்க்கிறேன்..!*

*மு.முருகேஷ் அவர்களின் மனம் கவர்ந்த*
*குறுங்கவிதை...*
*முத்தாப்பாய்!*

முதலில் நல்ல ரசிகன் ...அப்புறந்தான்
கவிஞன்.... கவிதை படியுங்கள் புரியும்...
ஆம்!

## எத்தனை அழகு

சிறகில் வானத்தை
முடிந்து கொண்டு செல்லும்
பறவைகள்தான்
எத்தனை அழகு

கனவு காணுவோம்... கவிதைகள் கனவு
காண வைக்க வேண்டும்... இதோ இந்தக்
கவிதைபோல...

## கனவுகள் ..

விரிக்காமல்
சுருண்டு
கிடக்கும்
பாயில்...
நமக்கான
ஓராயிரம்
கனவுகள்
சுருண்டேயிருக்கின்றன.

ஒரு கன்னம் காட்டச்சொல்ல,
மறுகன்னமும் காட்டச்சொல்லும்
கவிதை... மென்மையான வன்மையாக...

## நன்றி...

நேசக் கரங்களின்
கதகதப்பு எப்போதெல்லாம்
குறைகிறதோ
அப்போதெல்லாம்
கவிதையோடு
நடைப்பயிலக்
கற்றுக் கொள்கிறேன்
என்னை
புறந்தள்ளியவர்களுக்கு
நன்றி...

உலகில் நினைவுகள் பற்றி எழுதாமல்
கவிஞரா? எவ்வளவு அருமையாய்...
நினைவுகளில் நீந்துவது போல்...

## நின்னினைவுகள்

கவிதை எழுதத் தொடங்கும் முன்னமே
எழுத்துக்களில் சிம்மாசனமிட்டு
அமர்ந்து விடுகிறது
உன் நினைவுகள்.

பிரிவின் வலியை பிழியும் கவிதை
ஒன்று...

விடைபெற்ற பின்
குடையொன்றை
தந்து செல்கிறாய்
முழுதாய் நனைந்து
கொண்டிருக்கிறேன்
கண்ணீரில்!

## வேண்டல் ..

கோவிலுக்குள் சென்ற மழை
என்ன வேண்டியிருக்கும்?
கடவுளிடம்....

ஆமாம் என்ன வேண்டியிருக்கும்?
மனிதர்களிடமிருந்து காப்பாற்றி
பத்திரமாய் கடல் சேர்க்கவோ?
இருக்கலாம்...

இப்படி அருமைக்கவிதைகளால்
அகமேந்துகிறார் முதல் கவிதைத்

தொகுப்பில் கவிஞர்...

இன்னும் பல செம்மையான கவிதைகள் புத்தகம் முழுவதும் அணிவகுக்கின்றன. நீளம் கருதி சிலவற்றையே இங்கே குறிப்பிட்டுள்ளேன்....

மேலும் கவிஞருக்கு குறுங்கவிதைகளே... சிறப்பாக கைவர... அவற்றில் கவனம் செலுத்தி... இன்னும் பல அகமேந்திகளைத் தந்து சிறக்க என் வாழ்த்துகளும்... பிரார்த்தனைகளும்!

—

நூல் விமர்சகர்,
கவிஞர். ராஜூ ஆரோக்கியசாமி,
திருச்சி.

---

# ஆறாம் விரல்

வலி தந்து பிறந்தேன்;
வலியோடு வளர்ந்தேன்;
நல்வழிகாட்டி நகர்த்தி செல்கிறது - என்
ஐவிரல் பற்றிய "ஆறாம்விரல்" பேனா!...
படிக்கத் தூண்டியது கவிதைப்
புத்தகங்கள்.. படைக்கத் தூண்டியது
விரலிடைப் பிடித்த பேனா.

சாதிக்கத் துடித்த என் கைகளில்
அகப்பட்டது ஆறாம்விரல்
துப்பாக்கியாய் என் பேனா! வெளிவந்த
அத்தனை எழுத்துத் தோட்டாக்களும்
ஆழமாய் பதிந்தது படித்தவர்
இதயத்தில்!..

குனிந்து கிடந்த என்னை நிமிரச் செய்த
பெருமை - என் விரலிடையில் குனிந்தே
கிடந்த பேனாவையே சேரும்!
மண்ணின் பெருமை முதல் பெண்ணின்
பெருமை வரை எழுதி தீர்ப்பது இருவிரல்
இடையில் பெருவிரலாய் நிமிர்ந்து
நிற்கும் ஆறாம்விரல் பேனா!

மறைக்கப்பட்ட உண்மை;
மறுக்கப்பட்ட நீதி;

இவையெல்லாம் எழுதி முடிக்கப்பட்ட
தீர்வு பேனாவின் கையில்...

—

பொன்மணி தர்மராஜன்,
பரவாக்கோட்டை.

# லில்லி மன தோட்டம் - சிறுகதை

*"என்ன லில்லி... என்ன குழம்பு இன்னைக்கு....?" வெயிலுக்கு கண் கூசிய கிழவியின் நடையில்... பகல் உதிர்ந்தது.*

*"எப்பவும் கீரை குழம்பே வெச்சு ஊத்து.... பால்ராஜ் எப்பிடிதான் சமாளிக்கறானோ....!" இந்த பக்கம் திண்டில் அமர்ந்திருந்த கரோலினா தலை தூக்கி வெயில் காய்ந்தபடியே கேட்டாள். இரண்டு மூன்று சிறுவர்கள் ஓடி விளையாடிக் கொண்டிருக்க... ஜேக்கப் தாத்தா வழக்கம் போல எதுவும் பேசாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். ஆங்கங்கே சிலர் பேச்சற்று அமைதியில் திளைத்திருந்தார்கள். வான தூரத்தில்...மேக சத்தம்.*

*பகல் மினுக்கல்.... லில்லி நெற்றியில் வியர்வைக் கோட்டை இழுத்துக் கொண்டிருந்தது. அனல் பறக்கும் சுற்றம். ஆத்திரமற்ற ஆசுவாசமாக.....தோட்டம் ஒட்டிய பள்ளத்தில் ஓடும் நீர்க்கரையின் காற்று.*

*"அட....யாரது...... ரேச்சலா....... அட எதுக்கு இப்டி அழுதுகிட்டே இருக்க...?" கன்னம் விரிய கேட்டுக் கொண்டே ஏறிட்டு பார்த்த லில்லி... முகம் சுருங்க மீண்டும் கீரை ஆய்வதில் கவனம் செலுத்தினாள். ரேச்சலுக்கு சொல்லத் தெரியவில்லை. ஆனால் அழ மறக்கவில்லை.*

*நகரத்தின் சரசரப்பு சாலையில் வாகனங்களை இயக்கிக் கொண்டிருந்தது. வண்ணமற்ற சுற்றுச்சுவரில்.... வாழ்வின் நிச்சயமற்ற வார்த்தைகள் மௌனமொழி பேசியது.*

*தோட்டத்தின் பின் பக்கம் "பாஸ்டர் வில்லியம்ஸ்" நடந்தபடியே விளக்கிக் கொண்டிருந்தார்.*

*"அந்தா... அங்க பாத்தீங்கள்ல... அது மாதிரி கட்டினா.. ஒன்றரை வந்திரும். இதுன்னா 60 ல முடிச்சிரலாம். இந்தா.... இத பாருங்க... இது 2 கிட்ட வரும். இதுல என்ன ஸ்பெஷல்ன்னா... ஒரே குடும்பத்துல அடுத்தடுத்து நடந்தா... அப்டியே மேலருக்கற ஸ்லேப்பை திறந்து உள்ள வெச்சு மூடிடலாம்..."*

*.........................................!"*

*"அப்பறம் இடத்தை கவனமா நினைவு வெச்சுக்கணும்... எங்களுக்கு எப்படியும் மறந்துரும்.*

*நீங்க தான் நினைவு வெச்சுக்கணும். இப்டிதான் அந்தா.... அங்க இருக்கு பாருங்க... அந்த கல்லற கட்டும் போது... கொஞ்சம் குழப்பம் ஆகிடுச்சு. அந்த வீட்டு புள்ள ஒத்துக்கவேல்ல. இடம் மாறின மாதிரி இருக்குனு சொல்லி புலம்பிட்டே இருந்துச்சு. சரி தோண்டியே பாத்திடலாம்னு தோண்டினா அந்த பொண்ணு சொன்னது சரி தான். அது பக்கத்து குழி மேடு. ஆம்பளையோடது. கல்லறை கட்ட வந்த குழிமேடு லேடியோடது. அப்பறம் இடது பக்கத்துல தோண்டி சரியான குழி மேட்டை கண்டு பிடிச்சு... கட்டினோம்.*

"*கல்லறை கட்ட குழி கீழ வரை தோண்டனுமா...?*"

"*ஆமாமா... குழியை கீழ வரை தோண்டி பாடி இருக்கற இடத்துலருந்து சுவர் மேல வரணும். இல்லன்னா கல்லறை மழைக்கு கீழே இறங்கிடும். அத பத்தியெல்லாம் கவலையே பட வேண்டாம்.. நீங்க எந்த மாதிரின்னு முடிவு பண்ணி சொல்லுங்க.. மூணு மாசத்துக்கு அப்புறம் கட்ட ஆரம்பிச்சிடலாம்...ஏன்னா புதைச்சு குறைஞ்சது மூணு மாசமாவது ஆகணும்..*"

*வில்லியம்ஸ் சொல்லிக் கொண்டே தோட்டத்தின் முகப்பு பக்கம் வர...... லில்லி எதிரே வெற்றிடங்களிடம் பேசிக் கொண்டிருந்ததை பார்த்து விட்டார்.*

"*ஏய் லில்லி... இதே வேலையா... உன் மாயத்தோற்றத்தை இன்னைக்கும் ஆரம்பிச்சிட்டியா... எத்தன வாட்டி சொல்றது.. செத்தவங்க ஒருபோதும் திரும்பறது இல்ல... ஒரு முறை செத்துட்டா அவ்ளோதான். ஆவி காத்துல கலக்குது... ஆன்மா கடவுள்கிட்ட போகுது... ஒரு மண்ணும் இல்ல. ஒரு இயந்திரம் நின்னுட்டா என்ன ஆகுமோ அப்டி தான் உடல்ங்கிற இந்த இயந்திரமும். செத்ததுக்கு அப்புறம்.. என்னாகும் என்னாகும்னு சும்மா கேட்டு நேரத்தை ஓட்டிட்டு இருக்கறதுல அர்த்தமில்ல. செத்ததுக்கு அப்புறம் ஒன்னும் ஆகாது. நினைவு அழிஞ்சு போகும். அவ்ளோதான். சூனியம் வெறுமை... மாயம் இதெல்லாம்.. வெட்டி பேச்சு. இந்தா இப்ப கீரை ஆஞ்சுட்டு இருக்க பாரு. இது தான் உண்மை. இப்ப உயிரோட எப்பிடி இருக்கோம்னு யாருக்கும் தெரியாது. செத்ததுக்கு அப்பறம் ஏன் செத்தோம்னு யாருக்கும் தெரியாது. ஏன் தெரியாதுன்னெல்லாம் கேக்கறது பயனற்றது. தெரியாதுன்னா தெரியாது. அவ்ளோதான். உள்ளே இயங்கிட்டுருக்கற சூடு அடங்கிட்டா அது மரணம். அப்பறம் ஒண்ணுமில்ல. அது தான் இந்த பரிணாம வடிவம். வாழ்க்கைக்கு எப்படி அர்த்தம் சொல்லவே முடியாதோ அது மாதிரி தான் மரணத்துக்கும் அர்த்தம் சொல்லவே முடியாது. நீ என்னமோ ஆயிரம் வருஷம் வாழ போற மாதிரி செத்தவங்கள பார்த்தா என்ன அப்டி ஒரு கழிவிரக்கம். அதெல்லாம் ஒரு வெங்காயமும் வேண்டாம். இருந்தா இருப்பு. இறந்தா இறப்பு. அவ்ளோ தான். புரியுதா. டக்குனு சமையல் வேலையை முடிச்சிட்டு சவப்பெட்டிக்கு துணி அடிக்கற வேலைய பாரு. எங்க......உன் புருசன்..*" *என்று கேட்டுக் கொண்டே திரும்ப பீடியை பட்டென்று கீழே போட்டு விட்டு பக்கவாட்டு பக்கமிருந்து வெதுவெதுவென வந்த பால்ராஜ்...*" *ஐ...யா...*"

என்று கோணினான்.

"சும்மாதான பராக்கு பாத்துட்டுருக்கற... ரெண்டு குழி தோண்டி வைக்கலாம்ல... திடீர்னு ஏதாது ஒன்னு வந்தா அப்ப மூச்சை புடிச்சுட்டு தோண்டிட்டு இருப்ப...... இல்லயா...." என்று கேட்டுக் கொண்டே பால்ராஜை ஆழமாக பார்த்து... "சரி... போ.... போய் வேலைய பாரு" என்று சொல்லி விட்டு... நகர... பால்ராஜ் தலையை சொறிந்து கொண்டே நகர்ந்து விட்டிருந்தான்.

ஒரு வாரத்துக்கு முன் புதைத்து விட்டு கல்லறை கட்டுவது குறித்து கேட்க வந்தவர்களிடம் திரும்பி கிசுகிசுக்கும் குரலில் பேச ஆரம்பித்தார் வில்லியம்ஸ்.

"அது... ஒரே புள்ள... 6 வயசு குழந்தை. பக்கத்து வீட்டு தறுதலை நாசம் பண்ணி கொன்னே போட்டுட்டான். அவனுக்கு தண்டனை என்னமோ கிடைச்சிருச்சு. ஆனா தண்டனை கிடைச்சு என்ன பண்ண. புள்ள போனது போனது தான. பால்ராஜ்க்கும் லில்லிக்கும் அந்த ஊருல இருக்க பிடிக்கல. ஏன் அந்த உலகத்துல இருக்கவே பிடிக்கல. புள்ளையை தூக்கிட்டு வந்து புதைச்சிட்டு இங்கயே சுத்தி சுத்தி வந்தாங்க. என்ன சொல்லியும் கேட்கல. இந்த காம்பவுண்ட் தாண்டினா பொதுவுல பார்த்து காரி துப்பி கெட்ட வார்த்தையா பேசினாங்க. தொடர்ந்து வெளிய இருந்தா கண்டிப்பா புத்தி பிசகிடும்னு தோணுச்சு. சரி... எனக்கும் இந்த கல்லறை தோட்டத்த பாத்துக்க ஆள் வேணும்னு பாத்துட்டு தான் இருந்தேன். சரி.. கொஞ்ச நாள் இங்கயே இருங்கன்னு.. முகப்புல இருக்கற ரூம்ல தங்கிக்க சொல்லிட்டேன். இவுங்களுக்கு புள்ள கூடவே இருக்கற மாதிரி ஒரு நினைப்பு... எனக்கு கல்லறை தோட்டத்துக்கு காவல்...." அவர் பேசிக் கொண்டே வாசல் பக்கம் போய் விட்டிருந்தார்.

அறைக்குள் அடுப்பில் சோறு வெந்து கொண்டிருக்க... எதிரே சற்று தள்ளி அமர்ந்து சவப் பெட்டிக்கு கருப்புத் துணி கட்டி கொண்டிருந்தாள் லில்லி. அவளின் அருகே அமர்ந்து அம்மாவிடம் ஏதேதோ பேசிக் கொண்டிருந்த அவர்களின் இறந்து போன குழந்தை... அடுப்பிலெரியும் நெருப்பின் ஜுவாலை வெளிச்சத்தில் தக தகவென தேவலோக மனுசி போல மின்னி கொண்டிருந்தாள்.

—

கவிஜி.

# வெயில் தேவை

வெயில் அடிச்சா போதும்
தறி நல்லா ஓடிடும்
வெயில் வந்தா போதும்
பயிர் பொழைச்சுக்கிரும்
நல்லா வெயிலடிச்சா
'சகதியில்லாம சாலையில
எளிதாக இருக்கும்
வெயில்னா பள்ளிக்கூடத்திற்கு
லீவு விடத் தேவையில்லை
'வெயிலா இருந்தா கூட சமாளிச்சுரலாம்
இந்த மழைதான்... என்பவர்கள்தான்
கோடையில்
வானம் பார்த்து சபிக்கின்றனர்
வெயில் கொடுமையென்று!

## முதுமை வலி

வீட்டிலிருந்து
வெளியேற்றும்போது
வலிக்கவில்லை

வழியனுப்ப யாருமில்லாத
தெருவின் பார்வைதான்
நெஞ்சைப் பிளக்கிறது!

—

ரகுநாத் வ,
மதுரை.

---

# நீர்க்குமிழி

துருக்கி - சிரியா பூகம்பத்தில்
30,000 பேர் மரணம்
நியூசிலாந்து புயலில்
சிக்கிய மக்கள்
கார், பேருந்து விபத்தில்
குடும்பத்தோடு 5 பேர் பலி
இரயிலில் அடிபட்ட
வாலிபர் சாவு
செய்தித்தாளில் தினமும்
இப்படியான செய்திகள்
உச் கொட்டி
நொடிபொழுது
கவலைகொண்டு
உயிர்த்தெழும் மனிதம்
செய்தித்தாளை மூடி வைப்பதோடு
மரணிக்கிறது மீண்டும்.

—

பா. சிவகுமார்

அதன் பின்னே...

உள்ளம் கொடுத்த
உற்சாக துள்ளலில்
அலட்டல் பேச்சுக்கும்

சரியான
சொல்லும்
செயலும்
இருந்தாலும்
அது பிடிக்காதவரிடமிருந்து
என்பதால்
எதிர்ப்பதும்

சாதாரண
செயலுக்கும்
உரியவரிடம்
காரியம் ஆக வேண்டி
இருப்பதால்
வானாளாவ புகழ்வதும்

யார் மேலே
உள்ள கோபம்
உள்ளத்தில்
உச்சத்தில் இருக்கையில்
பிறர் பேச வருகையில்
கீழ் உள்ளவர் எனில்
வசை மொழி பாடுவதும்
மேலுள்ளவர் எனில்
ஒத்துழைக்க மறுப்பது

ஆன பின்னே
வேறு யாரோ
விமர்சிப்பது இருக்கட்டும்

தனிமையில்
இது பற்றி யோசிக்கையில்
மனசாட்சி கேட்கும்
கேள்விக்கு என்ன பதில்

////////////////////

அப்ப வேணாமே...

மெல்லிய சாரலில்
நடை

இயற்கையை
ரசித்தபடி
மகிழ்வுந்தில்
நெடும் பயணம்

மனதை
மகிழ்விக்கும்
திரை இசை

ரசித்து
உள்ளத்தை
இலகுவாக்கும்
நகைச்சுவை

நிதாமானமாய்
மானசீகமாய்
கிடைத்தவற்றுக்கு
நன்றியும்
எதிர்பார்ப்புக்கு
வேண்டுகோளுமாய்
இறைவனிடத்து
பிரார்த்தனை

கால இடைவெளிக்குப்பின்
வாய்ப்பு கிடைத்து

உறவுகளிடத்தும்
நட்பிடத்திலும்
நெடிய பேச்சு

வாழ்வின்
பொக்கிஷங்களாகிய
இந்த கணங்களில்

நேற்று
இன்று
நடந்தவை பற்றி
நாளைய
நடக்கப்போவதை
பற்றி
அப்ப யோசித்து

அந்த நேரத்து
மகிழ்ச்சிகளை,
நிம்மதியை
இழக்க வேண்டாமே..

////////////////////

நீயும் தான்...

நான்
எதிர்பார்த்த அளவு
செயல் இல்லை
முடிவு அமையவில்லை
ஆரம்பமும்
இறுதியும்
இன்னும்
சிறப்பாய்
இருந்திருக்கலாம்
சூழ்நிலைக்கு ஏற்ப
அணுகுமுறையை
மாற்றியிருக்கலாம்

என தொடர்ச்சியான
குற்றச்சாட்டுக்கு

நீயும் தான்
உன்னுடைய
விருப்பத்தை
எண்ணத்தை
தகுதியறிந்து
உண்மை உணர்ந்து
மாற்றியிருக்கலாம்

என பளிச்சென
பதில்
புத்தியிடமிருந்து பதில்
மனதுக்கு...

////////////////////

என்ன தான்...

நம் எண்ணமும்
செயலும் சரி
என மனசாட்சி
சொன்னாலும்...

பிறர்
புரியாமையாலோ
பிடிக்காததாலோ
பெரியவன் என அலட்டிக்கொள்ளவோ
இது ஒரு விடயமா
என்று ஏளனப்படுத்தவோ

எதிர் மறை விமர்சனங்கள்
வைக்கப்படுகையில்

தன்னம்பிக்கை ஆட்டம்
கோபம் தலைக்கு ஏறுதல்
மனதை பிசையும் வருத்தம்
அரங்கு ஏறத்தான் செய்கிறது

////////////////////

கேட்கத்தான்
மலர்ச்சியற்ற
சோக முகத்தையும்
எப்பொழுது வேண்டுமானாலும்
கண்ணிலிருந்து
வழிய தயாராய்
இருக்கின்ற நீரையும்
பார்த்து
சொல்லாமலேயே
என்னாச்சு?
என்றும்

இழந்த கதையும்
எதிர்பாராத ஏமாற்றத்தையும்
முயற்சிக்குப்பின்னான
தோல்வியையும்
விவரித்து உணர்வுகளை
வார்த்தை வடிவில்
கொட்டுகையில்
குறுக்கிடாமால்
தோள் தட்டி
பொறுமையாய்
நம்மிடம்
யாராவது கேட்க ஆசை
ஆதங்கம்
மனித மனங்களில்

////////////////////

அந்த கேள்விக்கு...

எல்லாம் வல்ல
இறைவனுக்கு
நமக்கு
வேண்டுவன
வேண்டாதவை
தெரியாதா

பிரார்த்தனையின்
போது
எதற்கு
இத்தனை
நீள வரிசையான
கோரிக்கைகள்

என்ற
புத்தி ரீதியான
கேள்விக்கு

என்ன தான்
முயன்றாலும்
பிரார்த்தனை பொழுதினில்
உள்ளிருக்கின்ற
பயம்
பதட்டம்
வெளிப்படுத்தி
உள்ளத்தை
பாடுபத்திக்கொண்டிருக்கும்
இருப்பதை
கொட்டி தீர்த்து
அவர் பார்த்துக்கொள்வார்
என்கின்ற பொழுது
மனது லேசாகிறது

என்ற உணர்வு ரீதியான
பதில்
சாமானியனிடம்

////////////////////

அதுக்காக...

சொன்னதை
செய்யாததற்காக

எதிர்பார்த்தது
நடக்காத

எதிர்பாராதது
நடந்து
சங்கடம் கொடுத்தற்காக

கோபம் வரலாம்
பதட்டம் தரலாம்
பயம் கொடுக்கலாம்

அதுக்காக
துளியும் சம்பந்தமில்லாதவரிடம்
உதட்டு மொழியால்
வசை பாடுவதும்
முகமொழியில்
கடுமை காட்டுவதும்
என்ன நியாயம்?

////////////////////

யாரோவுக்காவவும்...

முகூர்த்த நாட்களில்
மண்டபம் கடக்கையில்
தம்பதியினருக்கு
இதயத்துக்குள்ளே
வாழ்த்தும்
இறைவனிடத்து
வேண்டுதலும்

பொது இடங்களில்
தடுமாறி விழ இருப்பவரை
இல்லை விழுந்தவரை
பதறி போய்
தூக்குவதும்

மருத்துவ அவசர ஊர்தி
செல்கையில்
குணம் அடைய
உள்ளுக்குள்ளேயை
பிரார்த்திப்பதும்

இறுதி ஊர்வலம்
செல்கையில்
ஆத்மா அமைதியுற
மனதுக்குள்ளேயை
வேண்டுவதும்

யாரோவுக்குமாய்
இருந்தால்

அதன் பெயர்
மனிதம்

////////////////////

உள்ளுக்குள்ளேயே...

இதை துல்லியமாய்
செய்திருக்கிறோம்

சொன்னால்
நம் மீது மதிப்பு வரும்

இதில் நமக்கே
தெளிவில்லை
என்னவாக போகிறதோ

இது என்னவென்றே
தெரியவில்லை
பிறர் சொன்னதை கேட்டு
சொல்கிறோம்
எதிர் கேள்வி வந்தால்
என்ன செய்ய

இந்த பணியே
தொடங்கவில்லை

ஏன் செய்யவில்லை
என்ன சொல்ல

என முடிவுக்கு
முன்னே
அடுக்கு அடுக்காய்
கேள்விகள்
மனதுக்குள்ளேயே

—

*A.S. சுந்தரராஜன்,*
*கைப்பேசி: 9994920236*

---

## அகன்ற வானப் பாத்திரத்தில்

நட்சத்திர ஓட்டைகள்.

வானப் பாத்திரத்தில்
தவறி விழுந்த வெட்டுக்கிளி
வானூர்தி .

வானப் பாத்திரத்தை
நிலாமூடி கொண்டு
மூடியதும் இருளில்
மூழ்கியது உலகம்.

வானப் பாத்திரத்தில்
மேளதாளம் முழங்க
வானவேடிக்கை
இடியும் மின்னலும்.

வானப் பாத்திரத்தின்
அடியில் உலகம்.

—

ஆனந்தன்,
திருப்பூர்.



# உன்னைப் பின்தொடரும் என்னை

நீ பார்க்காத
பார்வையெல்லாம் சேர்த்து
பார்த்துக்கொண்டிருக்கிறது
உன் கூந்தலில் இருக்கும்
ஒற்றைரோஜா...!
/

துவைத்த
பருத்தியாடையாய்
பசிக்கும் வயிற்றில்
சுருக்கங்கள்.
கஞ்சி ஊற்றி
சலவை செய்தல்
உத்தமம்.
/
என்னை
எடுத்துக்கொண்டு
போவதற்கு முன்
உன்னை
கொடுத்து விட்டுப்போ...!
/

பெருங்கனவைப் பிரித்து
மேயும் நீளரவில்
நிலவின் குளுமையை
ஆதரிக்கும் வண்ணமாய்
நிற்காமல் பெய்கிறது மழை!
/

எல்லையைக் கடக்க
வேண்டிய கட்டாயத்தில்
போராட்டமென்னும்
பெருமுடிச்சு திரள்கிறது
எதிரில்.
/

தொடுக்க வந்த பூக்கள்
தலைவணங்கியது
நாரிடம்.
/

உன் பெருங்கடலில்
சங்கமித்திடவே
நான் வற்றாத நதியாகிறேன்.
/

உன் காதலெனும்
பெருநதியைக் கடப்பதற்கு
அன்பெனும் படகில்
துடுப்பாய் வருகிறேன்.
/

நீயென் வீட்டிற்கு வந்த
சந்தோஷத்தில்
ஜன்னல் கதவுகளை
திறப்பதும் மூடுவதுமாய்
இருக்கிறது காற்று.
/

கிளையில் அசையும்
கருப்பு ஞெகிழிப்பையை
தன்னினமென்று கூடியுண்ண
கரைந்தழைக்கிறது காகம்.
/

மகிழ்ச்சியில்
தோகை விரித்தாடும்

மயிலுக்கு
எப்படிச் சொல்வேன்?
பூங்காவில் பொழிவது
மழையல்ல
செயற்கை நீரூற்றென்று!
/

தூய்மையற்ற
மனதில் நிலைப்பதில்லை
சத்தியங்கள்.
/

பக்கத்தில்
கட்டடம் உயர உயர
என் குடிசையில்
காற்றும், வெளிச்சமும்
காணாமல் போனது.

/

வைத்த பொருட்கள்
வைத்த இடத்தில்
அதுவரை அருங்காட்சியகமாய்
இருந்த வீடு
ஒரு குழந்தை கலைத்து
விளையாடியதும் அழகானது.

—

கவிதைகள் ஆக்கம்,
பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602.
கைப்பேசி: 9443139353



---

# நெகிழி அரக்கன்

நீண்ட பெருமூச்சு விடுகின்றன
மனிதனின் கரங்களில்
அழுந்திய நெகிழிகள்!
மூச்சிறைக்க விடுகின்றன நம்மை!

எங்கும் கைகளை வீசி
செல்லும் மனிதன்
கை நிறைய பெற்றுக் கொள்கிறான்
நெகிழிகளுடன் நோய்களையும்

நிலத்தடியின் குரல் வளையை
நெரிக்கிறது
நெகிழி அரக்கன் கண்ணீர் வடிக்கவும்
கடன் கேட்கிறது மழையிடம்

ஆழ்துளை கிணறும்
ஒப்பாரி வைக்கிறது
தன் அடிவயிறு பாலையானதால்...

குப்பையில் குற்ற உணர்வுகள்
மேலோங்கி நிற்கின்றன!
எங்கெங்குக் காணினும் நெகிழிகள்
மலடாகிப்போனது நிலம்!

குருடாகிப்போன நாம்
பங்கிட்டுக் கொண்ட பூமியை
அடுத்த தலைமுறைக்கு
பத்திரப்படுத்திச் சேர்ப்போம்!

நெகிழியைத் தவிர்ப்போம்
என்ற வாசகம்
புரட்சி செய்கிறது
நெகிழி அட்டையில்
அமர்ந்து கொண்டு

தட்பவெப்ப நீரை
நெகிழியில் ஊற்றி
உறிஞ்சிக் கொள்கிறான்!
தன் வாழ்நாளை கழித்துக் கொள்கிறான்!

பயன்படுத்தி எறியும் உலகில்
பாழ்பட்ட நாகரீகத்தில் சிக்கியே
பாழும் மனிதன்
தனக்குத்தானே
பாலை ஊற்றிக் கொள்கிறான்!

## சமத்துவப் பூக்கள்

மரணம் உற்றாரை
இறுதியாய் உற்றுப் பார்க்கும்
உறவினர்கள்!

ஏதோ சொல்ல வந்து
சொல்லாமல்
எஞ்சி நிற்கும்
ஏக்கம் கொண்ட
முகம் கண்டு
முட்டி நிற்கும்
கண்ணீர் பூக்களைச் சிந்த
போட்டிருந்த
பூமாலையில்
ஒட்டியிருந்த
தேன் துளியையும்   உவர்ப்பாக்கிக்
கொள்ளும்
இந்த பூக்கள்!

இறுதி ஊர்வலத்தில் வீதியெங்கும்
பூக்களை வீசி யெறிய
மண்ணை முத்தமிட்டு
தன்னை கரைத்துக் கொள்கின்றன
இந்த பூக்கள்!

சுடுகாட்டில்
உடன்கட்டை ஏறும்போதும்
இடுகாட்டில்
மண்ணில் புதையும் போதும்
தன்னைத்தானே
அர்ப்பணித்துக் கொள்கின்றன
இந்த பூக்கள்!

கல்லறையில் வைக்கப்படும்
மலர் வளையமும் வாட்டமுடன் தலை
சாய்த்து
கூட்டமாக நின்று
மௌன அஞ்சலி செலுத்துகின்றன
இந்த பூக்கள்!

ஆண் பெண் பேதமில்லை
நல்லோர் தீயோர் பாகுபாடில்லை
இளையோர் மூத்தோர்
வேற்றுமையில்லை
எல்லா பிணங்களின் மீதும்
சமத்துவ பூக்களை மலர விடுகின்றன!
இந்த பூக்கள்!!! ஆம் இது சமத்துவ
பூக்கள்!



—
பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்.
6380704001

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.